**தலைப்பு 173 – அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளில் அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்

கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

மொத்த நிதியேற்பாடும் செலவீனமும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 239,800,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 214,420,236 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 25,379,764 தொகை அல்லது 10.6 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மொத்தத் தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| மீண்டெழுபவை | 132,800,000 | 128,924,455 | 6,875,545 | 5.18 |
| மூலதனம் | 107,000,000 | 88,495,781 | 18,504,219 | 17.29 |
| மொத்தம் | **239,800,000** | **214,420,236** | **25,379,764** | 10.6 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுடன் தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்களுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 17301 | 3,000,000 | 2,979,672 | 1,000,000 | 1,785,426 | 10,000,000 | 7,388,640 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் வைப்புக் கணக்கு மீதி ரூபா 1,562,992 தொகை ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் இங்கு 3.1 தொடக்கம் 3.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 173 – அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களுக்காக செய்யப்பட்ட ரூபா 3,400,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 14 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்கான தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

கட்டுநிதிப் பதிவேடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம், 02 வருட காலத்திற்கு மேற்பட்ட ரூபா 440,000 தொகையான 02 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

17301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு ஒரு வருட காலத்திற்கு குறைவானதாக அறவிட வேண்டியிருந்த நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,388,640 ஆகும்.

## 3.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.6.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்விற்கு கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 30 அளவிலும் அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு செயற்பாட்டில் இருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) **விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சு இயங்கிக் கொண்டிருந்த செத்சிறிபாய கட்டிடத்தின் II ஆம் நிலையின் 6 வது தளத்தில் 5,450 சதுர அடி அல்லது ¼ தள பகுதி விளைவற்றிருந்தது.

(ஆ) **வருடாந்த மெய்மையாய்வுச் சபை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மெய்மையாய்வுச் சபை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்கான சபை அளவை மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவற்றின் மீதான அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அவ்வறிக்கை 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடைசி சபை அளவை 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் சபை அளவை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய பரிந்துரைகள் மீதான நடவடிக்கை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினால் தீர்த்து வைக்கப்படாத ஓராண்டிற்கு குறைவான காலமாக இருக்கின்ற பொறுப்புகள் ரூபா 2,259,581 தொகை ஆகும்.

**3.8 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 104(3) | மீளாய்வாண்டின் போது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் 03 வாகனங்களுக்கான விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | |
| 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | அமைச்சின் வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றுடன் அமைச்சின் செயன்முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 காசுக் கட்டுப்பாடு

அமைச்சினால் மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 10 | 02 |
| (ii) | இரண்டாம் நிலை | 73 | 46 | 27 |
| (iii) | ஆரம்ப நிலை | 20 | 16 | 04 |
| | **மொத்தம்** | **105** | **72** | **33** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.